*International Multidisciplinary Innovative Research Journal*
*An International refereed e-journal - Arts Issue*
**ISSN: 2456 - 4613**
**Volume- II (1)**
**September 2017**

# கம்பராமாயணத்தில் சடையப்ப வள்ளலின் பெருமைகள்

**நாகஜோதி.செ**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி (தன்னாட்சி),
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலப் புலவர்கள் மன்னனின் புகழ்பாடி பரிசில் பெற்று வாழ்ந்தனர். சங்கம் மருவிய காலத்திற்குப் பிறகு காப்பிய காலப் புலவர்களில் சிலர் வள்ளல்களின் ஆதரவில் தம் புலமையை வெளிக் கொணர்ந்தனர். சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் வள்ளல் சீதக்காதியாலும் அபுல்காசீம் மரைக்காயராலும் ஆதரிக்கப்பட்டார். ‘கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு’ எனக் கம்பரைப் போற்றிப் புகழ்ந்தது தமிழுள்ளம். ஆனால் பொருளுதவி செய்து ஆதரித்த ஒருள்ளம் வள்ளல் சடையப்பர் ஆவார். சடையப்ப வள்ளல் கம்பரின் புலமைத் திறத்தை அறிந்து, ஆதரித்து கம்பராமாயணம் பாடச் செய்தார். இத்தகைய வள்ளலின் சிறப்பினைக் கம்பர் நன்றி மறவாத உள்ளத்தோடு நினைத்துப் பார்க்கக் கருதினார். எனவே தம் காப்பியத்தில் வள்ளலின் பெருமையினைப் பத்து இடங்களில் 1000 பாடல்களுக்கு ஓரிடம் என்னும் போக்கில் குறிப்பிட்டுள்ளார். ‘கம்பராமாயணத்தில் சடையப்ப வள்ளலின் பெருமைகள்’ என்னும் இத்தலைப்பில் சுருக்கம் கருதி சடையப்பரைப் பற்றி ஐந்து இடங்களில் உள்ள செய்திகளை மட்டும் சுட்டிக்காட்ட இவ்ஆய்வு கருதுகிறது.

## முன்னுரை

உலகப்பெருங்காப்பிய வரலாற்றில் கம்பர் எழுதிய இராமாயணம் 10,569 பாடல்களால் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கிறது. இதன் நயத்தை உணர்ந்த பாரதியார், “யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்….. பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை”[1] என்றார். ‘கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்’ என்று சொல்லுமளவுக்குப் பெருமை பெற்றவர் கம்பர். அவர் தம் சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்தமையால் சோழநாட்டைச் சார்ந்த “சடையப்பர்” என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். இவ்வள்ளலின் உந்துதலால் இராமாயணம் பாடினார்.

இவ்வள்ளலின் அன்பினைக் கருத்தில் கொண்ட கம்பர் இராமாயணக் கதைகளுக்கிடையே சடையப்ப வள்ளலின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறியமுற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கம்பர் இராமாயணம் பாட நேர்ந்த வரலாறு**

சோழமண்டலம் காவிரியாற்றுக்கருகில் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த சடையப்ப வள்ளலின் உள்ளம் கவர்ந்த நண்பர் கவிச்சக்கரவர்த்தி கம்பர். சடையப்ப வள்ளல் தம் உயிர் நண்பனின் கவித்துவ சக்தியை உணர்ந்து இராமனின் வரலாற்றைக் காவியமாகப் பாடுமாறு வேண்டினார். கம்பரும் அதற்கு இசைந்தார். எனினும் கம்பர் காலம் நீட்டித்தார். இதனை உணர்ந்த சடையப்பர் சோழமன்னன் கட்டளையிட்டால் கம்பர் நிச்சயம் பாடி முடிப்பார் என்பதை உணர்ந்து மன்னனிடம் தெரிவித்தார். சோழமன்னன் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் அழைத்து இராமனின் வரலாற்றைக் காவியமாக்குமாறு கட்டளையிட்டார். கம்பர் சரியென ஒத்துக்கொண்டு நீண்ட நாட்கள் எழுதாமலே இருந்தார். ஆனால் ஒட்டக்கூத்தர் வேகமிக்க ஆற்றலால் எழுதி முடிக்கும் தருவாயில் இருப்பதை அறிந்தார் கம்பர். சோழமன்னனிடம் காலத்தவணை கேட்க முடியாது என்பதை உணர்ந்த கம்பர் காவியத்தைப் பாட ஆரம்பித்தார். நாளொன்றுக்கு 700 பாடல்கள் வீதம் பாட ஆரம்பித்து இராமக்கதையை விரைவாகப் பாடிமுடித்தார் என்பர்.

**கம்பரின் நன்றி உணர்வு**

கம்பர் சான்றோர்கள் கூடிய ஸ்ரீரங்கத்தில் இராமாயணத்தை அரங்கேற்றம் செய்யக் கருதினார். சான்றோர்கள் அக்காப்பியத்தில் சடையப்ப வள்ளலின் புகழ் நூறு பாடல்களுக்கு ஓரிடத்தில் அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டினர். இங்ஙனம் அமைக்கப்பட்டுள்ளதற்கான காரணத்தைக் கம்பர், தன் உயிர் நண்பர் சடையப்ப வள்ளல் என்றும் இராமாயணம் பாடத் தூண்டியவரும் அறிவுறுத்தியவரும் அவர்தான் என்றும் கூறினார். மேலும், ‘அம்பிகாபதியின் திருமணத்தின் போது என் மாளிகையில் ஊரார் கூடியிருந்தனர். ஏதோ அலுவல் காரணமாக சடையப்ப வள்ளல் காலதாமதமாக வந்தார். அவருக்கு அமர இடமில்லாததால் மாளிகையின் ஓரத்தில் ஓடிய சாக்கடையின் அருகில் நின்றார். அதைக்கண்ட என் மனைவி அவரை, அண்ணா இங்கே வாருங்கள், அங்கே நிற்க வேண்டாம்’ என்று அழைத்தார். என் மனைவி சடையப்ப வள்ளலை உபசரித்ததை அறிந்த நான், பெண்ணே கவலை வேண்டாம், உன் அண்ணனை வைக்கின்ற இடத்தில் வைக்கின்றேன் என்றேன். அதனால் தான் இக்காவியத்தில் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடியுள்ளேன் என்றார். இதனைக் கேள்வியுற்ற நாதமுனிகள் வள்ளல் இராமனைப் பாடிய காவியத்தில் சடையப்பனை 1000 பாடல்களுக்கு

ஒருமுறை பாடினால் போதும் அதுவே சிறந்தது என்றார். கம்பர் இவ்யோசனையைக் கேட்டு, ஆமாம் வள்ளல் சடையப்பன் நூற்றுக்கு ஒருவர் என்பதைவிட ஆயிரத்தில் ஒருவர் என்பது பொருத்தமானது' எனக் கூறியதாக உள்ள கதையினைத் 'தமிழ்ச் சுடர்மணிகள்', 'கம்பரின் தனிப்பாடல்கள் ஆகிய நூல் வழி அறியமுடிகிறது.

**தற்சிறப்புப் பாயிரத்தில் சடையப்ப வள்ளலின் ஊர்ச்சிறப்பு**

கம்பர் இராம கதையைத் தொடங்குவதற்கு முன் தற்சிறப்புப் பாயிரம் பாடும் முறையைக் கையாண்டுள்ளார். ஓர் இலக்கியத்திற்கோ, இலக்கணத்திற்கோ முன்னுரையாக அமைவது பாயிரம் ஆகும். இப்பாயிரம் காப்பியத்தின், "பாடுபொருள் இன்னது என நுவன்றும் காவிய ஆக்கத்திற்குக் கவிதைக் கடவுளின் அருள்வேண்டி இறைஞ்சியும் அமையும்"[2] என்கிறார் ச.வே.சுப்பிரமணியன். இத்தகைய சிறப்புடைய பாயிரப் பாடல்களில் கம்பர் இராம கதையைப் பாடி முடித்த ஊர் பற்றிய செய்தியினை,

"தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின்
தந்ததே"[3]

என்கிறார். இவ்வடிகளில் கம்பர் தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பர் வாழ்ந்த ஊர் பற்றிக் குறிப்பிடுவதைப் பெருமையாகக் கருதியுள்ளார் என உணர முடிகிறது.

**கொடை வள்ளல் சடையப்பர்**

திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப முதலியார் கம்பருக்குத் தேவையான பொருளுதவி செய்து ஆதரித்து வந்தார். 'மாரியன்ன வண்கையையுடைய சடையப்பரின் கொடைச் சிறப்பினைக் கம்பர் தம் காப்பித்தில் வெளிப்படுத்துவதனைக் கடமையாக நினைத்துள்ளார். பாலகாண்டத்தில் விசுவாமித்திர முனிவர் தான் நடத்தும் வேள்விக்கு இராம இலட்சுமணர்கள் பாதுகாப்பாக இருக்கக் கருதி கானகத்திற்கு அழைத்துக் கொண்டு வந்த செய்தியைப் புலப்படுத்துவது வேள்விப்படலமாகும். அப்படலத்தில் விசுவாமித்திர முனிவர் இராமனுக்குப் படைக்கலம் தந்த நிகழ்வைக் கம்பர் சடையப்ப வள்ளலின் கொடைச் சிறப்போடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். வறுமையில் வாழ்வோரின் தரித்திரமாகிய வறுமை நோயினைத் தீர்ப்பதற்கு முதலில் தேவையானது அன்பு. இதனையடுத்து இனிமையாகப் பேசி அவர்களை ஆதரிப்பது அருமருந்து. இத்தகைய அன்பும் இனிமையான சொல்லும் கொண்ட சடையப்பர்,

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்"[4]

என்னும் பண்பினர். சடையப்பரின் அன்பு மொழிக்கு நிகரானது விசுவாமித்திரர் இராமனுக்குத் தந்த அஸ்திரம் என்பதனைக் கம்பர்,

"மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தனசடையன் வெண்ணெய்
அண்ணநன் சொல்லே யன்ன படைக்கல
மருளினானே"[5]

என்கிறார். இவ்வரிகள் மூலம் வறுமை நோயினைத் தீர்க்கும் மருந்துக்கு இணையானவர் சடையப்பர் என்பதனை அறியமுடிகிறது.

**பிறர் துன்பத்தைத் தாங்குபவர்**

"அறிவினான் ஆகுவது உண்டோ
பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை"[6]

என்னும் கொள்கையுடைய சடையப்பரின் சிறப்பினைக் கம்பர் யுத்தகாண்டம் சேதுபந்தனப் படலத்தில் வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது. இராவணனிடமிருந்து சீதையை மீட்பதற்குச் சேதுபாலம் அமைக்க சுக்ரீவன் வானர தச்சனாகிய நளனை வரவழைத்தான். விபீடணனின் ஆலோசனையோடு பாலம் அமைக்கத் தொடங்கினர். வானரக் கூட்டம் மலைகளைப் பிளந்து நளனிடம் தந்தன. அப்போது அம்மலைகளைத் தாங்கிப்பிடித்த நளனின் அச்செயற்பாட்டினைக் கம்பர்,

"விஞ்சையில் தாங்கினன் சடையன்
வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந்
தன்மைபோல்"[7]

என்கிறார். திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த சடையப்பரிடம் 'நீயே தஞ்சம்' என்று சென்றால் அவ்வள்ளல் அவர்களது துன்பத்தைத் தாங்குவார். இதனை நளன் மலைகளைத் தாங்குவது போன்று சடையப்பர் பிறர் துன்பத்தைத் தாங்குவார் என உணர வைத்துள்ளார் கம்பர்.

**சடையப்ப வள்ளலின் புகழ்**

கம்பர் சடையப்பர் மீது நீங்கா அன்பு கொண்டவர். இராமகதை எழுதும் போது ஆயிரம் பாடல்களுக்கு ஓரிடத்தில் சடையப்பர் பற்றிய செய்தியைக் குறிப்பிட்டுப் பாடக் கருதினார். மிதிலை மாநகரில் இருள் சூழ்ந்த விண்ணுலகையும் மண்ணுலகையும் நிலாவானது தன் ஒளிக்கீற்றினால் விழுங்கி எங்கும் ஒளி பரப்பியது. இக்காட்சியினைக் கம்பர் சடையப்பரின் புகழ் போல் நிலாவொளி எங்கும் பரவியுள்ளது என மனதில் நினைக்கிறார். இவ்வெண்ணத்தின் வெளிப்பாட்டினைக் கம்பர்,

"விண்ணுமண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால்"[8]

என்கிறார். இவ்வரிகள் மூலம் சடையப்பரின் புகழினை இயற்கையோடு ஒப்பிட்டுக் கூறி பெருமிதம் கொள்கிறார் கம்பர் என அறிய முடிகிறது.

கம்பர் மனதில் நீங்கா இடம் பெற்ற சடையப்பர் வேளாளர் மரபினர். இவ்வினத்தார் சோழ அரசனுக்கு மகுடங்கொணர்ந்து தருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். எனவே சூரிய குல வமிசத்தையுடைய இராமபிரானுக்குச்

சோழநாட்டு வழக்கப்படி சடையப்ப முதலியாரின் முன்னோர் மௌலி கொணர்ந்தனர். இந்நிகழ்வை,

"விரைசெறி கமலத் தாள்சேர்
வெண்ணெய்மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே
புனைந்தான் மௌலி"[9]

என்கிறார் கம்பர். இங்கு வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு மகுடம் சூடியதாக இருந்தாலும் கொணர்ந்தவர் சடையப்ப வள்ளலின் முன்னோர் எனக் கூறுவதைக் கம்பர் சிறப்பாகக் கருதியுள்ளார்.

**முடிவுரை**

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"[10]

என்னும் கொள்கையுடைய கம்பர் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை என்றென்றும் மறவாதவராக வாழ்ந்தவர். நன்றிக்கு வித்தாக சடையப்பரின் பெருமையினைப் பத்து இடங்களில் இராமகதைகளுக்கிடையே சுட்டியுள்ளார் கம்பர் என அறிய முடிந்தது.

**அடிக்குறிப்புகள்**


1. மகாகவி பாரதியார் கவிதைகள், பா.22.
2. ச.வே.சுப்பிரமணியன், காப்பிய இலக்கிய உத்திகள், ப.366.
3. கம்பராமாயணம், தற்சிறப்புப்பாயிரம், பா.11.
4. திருக்குறள், கு.எ.92.
5. கம்பராமாயணம், பாலகாண்டம், பா.418.
6. திருக்குறள், கு.எ.315.
7. கம்பராமாயணம், யுத்தகாண்டம், முதல் தொகுதி, பா.628.
8. மேலது, பாலகாண்டம், பா.634.
9. மேலது, யுத்தகாண்டம், இரண்டாம் தொகுதி, பா.4316.
10. திருக்குறள், கு.எ.108.